சார்பு நீதிமன்றம், மேட்டுப்பாளையம்

முன்னிலை : திரு.கே. பழனிவேல், பி.எல்.,

சார்பு நீதிபதி, மேட்டுப்பாளையம்

2026 ம் ஆண்டு மார்ச்சு திங்கள் 16 ஆம் நாள் திங்கட்கிழமை

(திருவள்ளுவராண்டு 2057 விசுவாவசு வருடம் பங்குனி திங்கள் 02 ஆம் நாள்)

அசல் வழக்குஎண்.11/2026

CNR.No. TNCB190006102025

பி.சந்திரன், த/பெ. பழனியாண்டி, வயது 61, வசிப்பிட முகவரி கதவு எண் .99, டைகர் ஹில், குன்னூர், தி நீல்கிரீஸ். .... வாதி

-இடையே-

துளசியம்மாள், க/பெ. பத்திரசாமி, வயது 36 , வசிப்பிட முகவரி, கதவு எண்.2/461, கல்லார் புதூர், ஓடந்துறை, மேட்டுப்பாளையம் - 641 301. மேட்டுப்பாளையம் தாலூக்கா, கோயமுத்தூர் மாவட்டம். .... பிரதிவாதி

இவ்வழக்கானது தாவா சொத்தின் மீதி கிரைய தொகையான ரூ .4,20,000 /ஐ பிரதிவாதி வாதியிடமிருந்து பெற்றுக்கொண்டு நீதிமன்றம் நியமிக்கும் காலகெடுவிற்குள் வாதி பெயரில் , வாதி செலவில் கிரையம் செய்து சுவாதீனம் ஒப்படைக்கும்படி பிரதிவாதிக்கு உத்தரவிட வேண்டும் என்றும் வழக்கின் செலவுத் தொகையுடன் தீர்ப்பளிக்குமாறும் இந்த வழக்கு வாதியால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது .

தாவா தாக்கல் செய்யப்பட்ட நாள் - 19.01.2026

வழக்குமூலம் ஏற்பட்ட நாள் - சிறுமுகை கிராமம் , மேட்டுப்பாளையம் தாலூக்கா, கோயமுத்தூர் மாவட்டம் நீதிமன்ற ஆள்வரை எல்லைக்குட்பட்ட பகுதியில் 26.07.2008, 23.10.2024, 06.11.2025, 11.11.2025 ஆகிய தேதிகளிலும் அதன் பின்னிட்டும் ஏற்பட்டுள்ளது.

வழக்கு மதிப்பு விபரம் - நீதிமன்ற ஆள்வரை மற்றும் நீதிமன்ற கட்டணத்தின் பொருட்டு வழக்கு மதிப்பு ரூ .5,70,000/-/- இதற்கு தமிழ்நாடு நீதிமன்ற

கட்டணம் மற்றும் வழக்கு மதிப்புச் சட்டம் பிரிவு42-ன்படி நீதிமன்ற கட்டணம் ரூ.17100/- செலுத்தப்பட்டுள்ளது.

## Details of Valuation

| | | | | |
|---|---|---|---|---|
| (a) | Value of property for Specific Performance | - | Rs.5,70,000/- | |
| | Total | - | Rs.5,70,000/- | |
| | Court fee paid under section 42 of Tamil Nadu Court Fee and Suit Valuation Act | | - | Rs.17,100/- |
| b) | Value of property for recovery of amount ( as a substitutional relief) | - | Rs.1,50,000/- | |
| | Total | - | Rs.1,50,000/- | |
| | Court fee paid under section 22 of Tamil Nadu Court Fee and Suit Valuation Act | | - | Rs.4,500/- |

The Court fees of Rs. 17,100/- is paid as the maximum Court fee for the two reliefs claimed

இவ்வழக்கு இந்நீதிமன்றத்தின் முன்பாக இறுதி விசாரணைக்கு வந்தபோது வாதி தரப்பில் வழக்குரைஞர் திரு .எஸ்.முனுசாமி, அவர்கள் முன்னிலையாகியும் , பிரதிவாதி நீதிமன்றத்தில் முன்னிலையாகாததால் ஒருதலைபட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டும் சாட்சியங்களை பரிசீலனை செய்தும் வாதி தரப்பு வாதத்தைக் கேட்டும் இறுதியாக இன்று இந்நீதி மன்றம் வழங்கும்.

## தீர்ப்பாணை

1. வாதி கோரிய பிரதான பரிகாரமான குறித்த வகை நிறைவேற்று பரிகாரம் அனுமதிக்கப்பட்டு மாற்று பரிகாரம் தள்ளுபடி செய்யப்படுகிறது.

2. தாவா சொத்தின் மீதி கிரைய தொகையான ரூ.4,20,000 / ஐ பிரதிவாதி வாதியிடமிருந்து பெற்றுக்கொண்டு 1 மாத காலகெடுவிற்குள் வாதி பெயரில், வாதி செலவில்

கிரையம் செய்து சுவாதீனம் ஒப்படைக்கும்படி தீர்ப்பளிக்கப்படுகிறது.

3. வாதிக்கு பிரதிவாதி வழக்கின் செலவுத் தொகையாக ரூ.17,120/-ஐ கொடுக்க வேண்டும் என்று தீர்ப்பளிக்கப்படுகிறது.

<u>செலவுத் தொகை பட்டியல்</u>

| வாதி தரப்பில் | | | பிரதிவாதி தரப்பில் |
|---|---|---|---|
| தாவாவிற்கு கட்டணம் | - | ரூ.17,100/- | --இல்லை - |
| வக்காலத்துக்கு கட்டணம் | - | ரூ. 20/- | |
| மொத்தம் | - | ரூ,17,120/- | |

## SCHEDULE OF PROPERTY

கோயம்புத்தூர் வடக்கு ரிடிடு, மேட்டுப்பாளையம் சப்ரிடிடு, மேட்டுப்பாளையம் வட்டம், ஓடந்துறை கிராமம், 436 நெ. பட்டாவில் தாக்கலானபடி க.ச. 423/1 நெ. பு. ஏக்.3.83 – க்கு தீர்வை ரூ.1.15 இதில் சரிபாதி ஏக்கர் 1.92 – ல் ஓர் பாகம் ஏக் .0.92 விஸ்தீரணமுள்ள புஞ்சை பூமியில் மேபுறமுள்ள ஏக்.0.72 விஸ்தீரணமுள்ள பூமியை மனையிடங்களாகப் பிரித்துள்ளதில் உள்ளதும், மேற்குறிப்பிட்டுள்ள 13464/2008- நெ. கிரய ஆவணப்படி நம்மளில் 2 லக்கமிட்டவருக்கு பாத்தியப்பட்ட 16 ம் நெ.மனையிடம் மற்றும் அதில் கட்டப்பட்டுள்ள கட்டிடம் வகையறாச் சொத்துக்கு செக்குபந்தியும், அளவுகள் விபரம்.

| | | |
|---|---|---|
| 17-ம் நெ. மனையிடத்திற்கும் | ... | வடக்கு, |
| க.ச.424/B நெ.காலைக்கும் | ... | தெற்கு, |
| தென்வடல் லே-அவுட் ரோட்டுக்கும் | ... | கிழக்கு, |
| 21-ம் நெ. மனையிடத்திற்கும் | ... | மேற்கு |

இதன்மத்தியில்

| | | |
|---|---|---|
| வடபுரம் கிழமேலடி | ... | 30'-06" |
| தென்புரம் கிழமேலடி | ... | 30'-06" |
| கிழபுரம் தென்வடலடி | ... | 20'-00" |

மேபுரம் தென்வடலடி ... 20'-00"

ஆக இந்த அளவுகளுக்கு கூடிய மொத்தம் 610 சதுரடிகள் ( 56.67 சதுர மீட்டர்கள்) கொண்டதற்கு 01 செண்ட் 174 சதுரடிகள் விஸ்தீரணமுள்ள அடிநிலம் பூராவும் மற்றும் மேற்படி இடத்தில் மேற்கு வாசல் வைத்து ஆர் . சி. சி. போட்டுக் கட்டப்பட்டுள்ள வீடும், மேற்படி வீட்டின் உள்ரூம்கள் , கதவு, நிலவு, கட்டுக்கோப்பு, முன்பின்வாசல், பிறவிடை, காலியிடம், பாத்ரூம் , கழிவறை மற்றும் இதர கட்டுமானங்கள் சகிதம் . மேற்படி கட்டிடத்திலுள்ள இலவச மின்சார இணைப்பு அதன் டிப்பாசிட் பிட்டிங்ஸ் மற்றும் குடிநீர் குழாய் இணைப்பு வரி விதிப்பு எண் .900 அதன் டிப்பாசிட் பிட்டிங்ஸ் சகிதம் . கட்டிடத்தின் கதவு நெ.2/461, வரி விதிப்பு எண் .1189, மேற்படி சொத்துக்கு மேற்படி மனையிடப்பிரிவில் விட்டுள்ள அனைத்து ரோடுகளிலும் மற்றும் மாமூல் ரோடுகளிலும் போக ,வர வண்டி வாகனங்கள் ஓட்டிப்போக வர வழி பாத்தியங்கள் சகிதம் . மேற்படி ஓடந்துறை கிராமம் . க.ச.423/1 நெ. காலையில் உள்ளது . மேற்படி சொத்து ஓடந்துறை கிராமப் பஞ்சாயத்து எல்லைக்குட்பட்டது.

2026 ஆம் ஆண்டு மார்ச்சு திங்கள் 16 ஆம் நாள் என்னுடைய கையெழுத்தும் இந்நீதிமன்ற முத்திரையும் இடப்பட்டன.

Sd/-K.Palanivel,
சார்பு நீதிபதி,
மேட்டுப்பாளையம்,